சுருக்கம்

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு 2010– கோயம்புத்தூர் மாநகராட்சி– உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்காக கோயம்புத்தூர் மாநகராட்சியில் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல்– அயற் பணியில் நிரப்ப அனுமதி– ஆணைகள் வெளியிடப்படுகிறது

= = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் கு+டிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்:134 நாள்:29 –03–2010

திருவள்ளுவராண்டு 2041, பங்குனி 16

படிக்கப்பட்டது

1. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி கடித எண்.12359/2009/எம்.டி.3 நாள் 20–12–2010
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித எண். 9417/2010/எப்4 நாள் 03–03–2010

ஆணை:-

கோயம்புத்தூர் நகரில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுப் பணிகளுக்காக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கூடுதல் பணியிடங்களை தோற்றுவிக்கக் கோரும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினையும், அச்செயற்குறிப்பின் மீதான நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையையும் அரசு கவனமுடன் ஆய்வு செய்து கீழ்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது:-

(1) உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுப் பணிகளை நிறைவேற்ற, முற்றிலும் தற்காலிகமாக 15–07–2010 வரையிலான காலக்கட்டத்திற்கு, பணியாளர் செலவினைத்தை கோயம்புத்தூர் மாநகராட்சியே மேற்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், கீழ்கண்ட பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றன:-

| | பணியிடத்தின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி செயற் பொறியாளர் | 2 |
| 2 | இளநிலைப் பொறியாளர்/ உதவிப் பொறியாளர் | 10 |
| 3 | வரைவாளர்/தொழில்நுட்ப உதவியாளர் | 10 |

(2) மேற்படி பணியிடங்களை தனது கட்டுப்பாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் பொறியியற் பணியாளர்களை கொண்டு அயற்பணியில் (Deputation) நிரப்ப நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–600 108
நகல்:-
நிதித் [நநி (ம) குவ] துறை, சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந2/நப3) துறை. சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (இணையதளம்) துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்